தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்கிழமை, 1978 மார்ச் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஆலத்துறை பாசனத் திட்டம்

421 வினா—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நான்குநேரி வட்டத்திலுள்ள ஆலத்துறை ஆறு நீர்ப்பாசனத் திட்ட வேலை முடிவடையும் தருவாயிலேயே நீண்டகாலமாக இருக்கின்றதா?

(ஆ) இத்திட்டம் நிறைவுபெற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) ஆலத்துறையாறு திட்டத்தில் கால்வாய் முடியும் இடத்திலுள்ள டிராப் (drop) மற்றும் பாதுகாப்பு வேலைகள் தவிர மற்ற எல்லா வேலைகளும் முடிவடைந்துவிட்டன. கால மழையினாலும், அண்மையில் இயங்குகின்ற இராணுவ பயிற்சி முகாமினாலும் இந்த வேலை தடைப்பட்டுள்ளது. தண்ணீர் செல்வதற்கு இந்த முடிவடையாத வேலைகளால் எந்த தடையும் கிடையாது.

திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலத்துறை நீர்ப்பாசனத் திட்டம் ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டு திறக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப் போல அங்கு அடிக்கடி இராணுவ முகாம் இடுகின்ற காரணத்தால் வேலை தடைப் பட்டிருந்தது உண்மை. இப்போது மலைப் பகுதி வேலை முடிந்து, ஆற்றுப் பகுதி வேலை மட்டும் பாக்கி இருக்கிறது. இந்த நேரத்தில் வேலையை முடிக்கின்ற அந்தத் திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு, தண்ணீர் பயன்படுத்துவதை ரெகுலேட் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

பச்சையாறு திட்டம்

* வினா—திரு. யா. சை. மு. யூசப், திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நான்குநேரி வட்டத்திலுள்ள பச்சையாறு திட்டத்திற்கு 1975 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப் பட்டும் வேலை தொடரப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் மறு பரிசீலனை செய்யப்படுகிறது. மேலும் கூடன்குளம் அருகே ஓர் அணு மின் நிலையம் அமைக்க இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. அணு மின் நிலையத்திற்கான தண்ணீரையும் வழங்குவதற்கு பச்சையாறு திட்டத்தை மாற்றியமைக்க விரிவான ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.